சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 75/2018

பெயர் திரு. மரியநாதன் நாள்.11.03.2025

<u>**வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. தச்சூர் ஆரோக்கிய மாதா கோயில் பாதிரியார் அந்தோணி மீது இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்குச் சொத்தின் புல எண்.296/3. அதன் விஸ்தீரணம் 30 சென்ட். வழக்கு சொத்தின் மேற்கே படாளம் பவுஞ்சூர் தார் சாலை, தெற்கே மேய்க்கால் புறம்போக்கு, கிழக்கே மற்றும் வடக்கே கன்னியாஸ்திரிகள் நிலம். வழக்குச் சொத்து ஆதியில் லூர்து ரெட்டியாருக்கு பாத்தியம். சர்பிரசாத் ரெட்டியின் தகப்பனார் பெயர் சாலமன். சர்பிரசாத் ரெட்டியை நான் பார்த்துள்ளேன். சர்பிரசாத் ரெட்டியின் உடன் பிறந்தவர் ஒருவர். அவர் பெயர் ஆரோக்கியசாமி. சர்பிரசாத் ரெட்டியின் தாயார் பெயர் எனக்கு தெரியாது. ஆரோக்கியசாமி சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். அந்தோணி ரெட்டி என்பவரை என்கது தெரியாது. மரியநாத ரெட்டிய என்பவரை எனக்கு தெரியும். சின்னம்மாள் என்பவரை எனக்கு தெரியாது. ரோஜம்மாளைத் தெரியும். லூர்து அம்மாளை எனக்கு தெரியாது. சின்னப்ப ரெட்டியார் சின்னம்மாள் என்றால் எனக்கு தெரியாது. சின்னப்ப ரெட்டியார் மற்றும் சின்னம்மாள் ஆகியோரின் வாரிசுகள் லூர்து ரெட்டியார், மற்றொருவர் பெயர் சவுரி ரெட்டியார் என்று ஞாபகம் மற்றும் ஒருவர் உள்ளார், அவர் பெயர் தெரியாது. மேற்கண்ட மூன்று நபர்களை நான் பார்த்ததில்லை.

2) சின்னப்ப ரெட்டியார் மற்றும் சின்னம்மாளின் மகள்கள் ரோஜாம்மாள் மற்றும் லூர்தம்மாளைத் தெரயுமா என்றால் ரோஜாம்மாளைத் தெரயும், லூர்தம்மாளைத் தெரியாது. ரோஜம்மாள் வழக்கு கிராமத்தில்தான் வசித்து வந்தார் என்றால் சரிதான்.

வழக்குச் சொத்து சின்னப்ப ரெட்டி மற்றும் சின்னம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனக்கு தெரியாது. சின்னம்மாள், ரோஜாம்மாள் மற்றும் லூர்தம்மாளுக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்த விவரம் எனக்கு தெரியாது. ரோஜம்மாள் எப்பொழுது இறந்தார் என்று எனக்கு தெரியாது. 40 வருடங்களுக்கு முன்பு வழக்குச் சொத்தைப் பொறுத்து நடந்த பரிமாற்றங்கள் குறித்து எனக்கு தெரியாது. அதன்பின்பு நடந்த விவரங்கள் தான் தெரியும்.

3) என் முதல் விசாரணையில் இருதய ராஜ் என்பவர் கிரயம் வாங்கியதாக கூறப்படும் வருடம் 1978 என்று நினைக்கிறேன். இருதயராஜ் பாதிரியார் வழக்குச் சொத்தை கோயிலுக்கு வாங்கியதாக என்னிடம் கூறினார். எந்த வருடம் கூறினார் என்றால் 1978 அல்லது 1980ல் கூறியிருப்பார். அந்த ஆவணத்தை நான் பார்க்கவில்லை. அந்த ஆவணத்தின் அசல் ஆவணம் கோயிலில் உள்ளதாக என்னிடம் கூறினார். இருதயராஜ் சொத்தை வாங்கியுள்ளதாக கூறியுள்ளதை வைத்து முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கிரயம் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. என்னுடைய முதல் விசாரணையில் 2 சென்ட் புறம்போக்கு நிலம் என்று கூறுவதின் புல எண் எனக்கு தெரியாது. அந்த 2 சென்ட் 30 சென்ட்டிற்கு தெற்கே உள்ளது.

3) வழக்குச் சொத்தை நான் தினமும் பார்த்து வருகிறேன். என் வீட்டிற்கு எதிரே தான் உள்ளது. 2ம் பிரதிவாதி வழக்குச் சொத்தில் 2024ம் வருடம்தான் உள்ளே நுழையப் பார்த்தார். 2024ல் நுழையப் பார்த்ததாக கூறும் விவரத்தை முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அச்சமயத்தில் ராமகோபாலின் கூலி ஆட்கள் வந்து வழக்குச் சொத்தின் வேலியைப் பிரித்தார்கள். நான் சென்று கேட்டேன். கேட்டதற்கு ராமகோபால் இடத்தை வாங்கிவிட்டதாக கூறினார்கள். பின்னர் ராமகோபால் அந்த இடத்திற்கு வந்தபோது அவரிடம் கேட்டதற்க அவர் 2ம் பிரதிவாதியிடம் கிரயம் பெற்றதாக கூறினார். அதன் பிறகு

அந்தோணி அங்கு வந்தார். அவ்வாறு நடந்தது சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு, ஞாபகம் இல்லை. 2ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் சீமோன். அவரின் தாயார் பெயர் எனக்கு தெரியாது. சீமோனுக்கு இரண்டு ஆண், இரண்டு பெண் வாரிசுகள். 3 நபர்களின் பெயர் தெரியும், மற்றொருவர் பெயர் தெரியாது.

4) அந்தோணி தவிர்த்து மற்ற மூவரையும் நான் பார்த்துள்ளேன். சீமோனுக்கு தச்சூர்தான் பூர்வீகம் என்றால் இல்லை. அவர்கள் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு தச்சூருக்கு வந்தார்கள். என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள லூர்து ரெட்டி, சபரி ரெட்டி, ஜாக்கோப் ரெட்டி ஆகியோரை நான் பார்த்ததில்லை. 2ம் பிரதிவாதியின் கிரய ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். அவர் லூர்தம்மாள் என்கிற லூர்து ரெட்டியிடம் கிரயம் வாங்கினார். எந்த வருடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கும், எனக்கும் விரோதம் உண்டு. அவர் ஒரு இருளர் பெண்ணை கற்பழித்ததால் அந்த பெண்ணிற்கு நான் ஆதரவாக சென்றதால் அது சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பு நடந்தது. அதற்கு முன்பு விரோதம் கிடையாது.

5) வழக்கு புல எண்.296ல் 7 சென்ட்ட இடத்தை 2ம் பிரதிவாதியிடம் இருந்து நான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கிரயம் வாங்கிய இடத்தில் தற்பொழுது வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. அதன் அருகில் குடியிருந்து வருகிறேன். அந்த 7 சென்ட் உட்பிரிவு செய்யப்பட்டு என் பெயரில் பட்டா வந்து விட்டது என்றால் சரிதான். அதன் புல எண். 296/2 பி என்றால் சரிதான். புல எண். 296/2 ஏ சாலை என்றால் சாந்தா வீடு. நான் 2ம் பிரதிவாதியிடம் இருந்து கிரயம் வாங்கிய சொதது சர் பிரசாத ரெட்டிக்கு உரிமையானது என்று என்னிடம் கூறினார். புல எண்.296ல் 30 சென்ட் ஒரு ஆவணமாகவும், 32 சென்ட் ஒரு ஆவணமாகவும் 2ம் பிரதிவாதி கிரயம் வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் கிரயமத்தை ஓப்புக் கொண்டு தான் நான் கிரயம் வாங்கினேன் என்றால் அவர் சர்பிரசாத் ரெட்டியிடம் பவர் வாங்கியததாகக்

என்னிம் கூறினார். பவர் எப்பொழுது வாங்கினார் என்று என்னிடம் கூறவில்லை. நான் 3 வருடங்களுக்கு முன்பு 2ம் பிரதிவாதியிடம் கிரயம் வாங்கியதாக ஞாபகம்.

6) நான் கிரயம் வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் 2ம் பிரதிவாதி சர்பிரசாத் ரெட்டியிடம் கிரயம் வாங்கினாரா அல்லது பவர் வாங்கினாரா என்று தெரியவரும் என்றால் சரிதான். நான் கிரயம் வலாங்கிய 7 சென்ட்டிற்கு கிழக்கே வழக்குச் சொத்து உள்ளது. என் வீட்டிற்கு கிழக்கே தார் சாலை, அதற்கும் கிழக்கே வழக்குச் சொதது உள்ளது. புல எண்.296/1 ஏ, 296/1 பி யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. சர்பிரசாத் ரெட்டியிடம் இருந்து 2ம் பிரதிவாதி பொது அதிகாரம் வாங்கியது எத்தனை சென்ட்டிற்கு என்றால் எனக்கு தெரியாது. எனக்கு கிரயம் கொடுத்த சொத்தை 2ம் பிரதிவாதி லூர்து ரெட்டி அம்மாளிடம் தான் கிரயம் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. லூர்து ரெட்டி அம்மாளிடமிருந்து 2ம் பிரதிவாதி கிரயம் வாங்கியதை ஒப்புக் கொண்டுதான் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரியல்ல. லூர்து ரெட்டியின் தகப்பனார் பெயர் சின்னப்ப ரெட்டியார். என் முதல் விசாரணையில் சொல்லியுள்ள லூர்து அம்மாள் மற்றும் ஜாக்கோப் ரெட்டி ஆகியோரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. ரோஜம்மாளின் கணவர் பெயர் ஞாபகம் இல்லை.

7) முதல் விசாரணையில் 2ம் பிரதிவாதி பல்வேறு குற்ற வழக்குகள் உள்ளதாகக் கூறுவதில் என்னென்ன வழக்குகள் என்றால் இருளர் பெண்ணை கற்பழித்தது குற்ற வழக்கு, திருக்கழுக்குன்றத்தில் ஒரு பெண்ணை பாலியல் சீண்டியதாக வழக்கும் ஆகிய மட்டும் தான் தெரியும். மற்றவை தெரியாது. அந்த வழக்கிற்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லும் சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும், 2ம் பிரதிவாதி மீது அவதூறு பரப்புவதற்காக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல.

திருக்கழுக்குன்றம்

வழக்கு பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. சொல் கேள்விதான். சொல் கேள்வியை வைத்து 2ம் பிரதிவாதி மீது குற்ற வழக்கு உள்ளதாகக் கூறுவது சட்டப்படி தவறு என்று சொன்னால் சரியல்ல.

8) எதன் அடிப்படையில் போலியான ஆவணம் என்று கூறுகிறேன் என்றால் 2ம் பிரதிவாதியின் சகோதரி பெயர் லூர்தம்மாள் என்பதை வைத்து லூர்து ரெட்டி என்று 2ம் பிரதிவாதி ஆவணங்களை ஏற்படுத்திக் கொண்டார். அந்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை. அந்த ஆவணங்களைப் பார்க்காமலயே எவ்வாறு போலியான ஆவணம் என்று கூறுகிறேன் என்றால் பாதிரியார் காண்பித்த வில்லங்கத்தைப் பார்த்து கூறுகிறேன். எப்பொழுது வில்லங்கத்தைப் பார்த்தேன் என்று ஞாபகம் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முன்பு பார்த்தேன். வில்லங்கத்தில் அந்த ஆவணம் எந்த வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது என்று குறிப்பிடப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. வில்லங்கத்தில் கிரயம் கொடுப்பவரின் கணவர் பெயர் ,தகப்பனார் பெயர் வராது என்றால் எனக்கு தெரியாது. அதனால் வில்லங்கத்தைப் பார்த்து ஆவணம் போலியான ஆவணம் என்று பொய்யாகக் கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு விவரங்கள் ஏதும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.